செ.வெ.எண்:07/2017 நாள்:04.08.2017

**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது, நமது மாவட்டத்தில் மக்கள் மத்தியில் கொத்தடிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், கொத்தடிமைகளின் நிலை, அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் கொத்தடிமை குறித்த, மத்திய, மாநில அரசின் புதிய திட்ட வழிமுறை குறித்து, அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளித்திட வேண்டும். தமிழகத்தில் 11 மாவட்டங்களிலுள்ள 22 வருவாய் கோட்டங்களில் கொத்தடிமைகள் குறித்த விழிப்புணர்வு சிறப்பு முகாம், International Justice Mission உதவியுடன் நடத்திட சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அதனப்படையில், இன்று (04.08.2017) நமது மாவட்டத்தில் International Justice Mission மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கான நிறுவனம் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள கருத்தரங்கு கூடத்தில் கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது.

மேலும், வருவாய்த்துறை அலுவலர்கள் கொத்தடிமை தொழிலாளர்களை கண்டறிந்து விடுவிப்பு சான்று வழங்குவது, அத்தொழிலாளியின் தலையெழுத்தையே மாற்ற வல்லது. எனவே, சரியான தருணத்தில் முறையாக செயல்படவேண்டும். விடுவிக்கப்பட்டவுடன் கொத்தடிமை தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகை ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம்) வழங்கப்பட வேண்டும். மேலும், மீட்கப்பட்ட தொழிலாளர்களின் மறுவாழ்விற்கு அரசின் அனைத்துத் துறைகளும் இணைந்து அரசின் பல்வேறு திட்டங்கள் உடனடியாக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்த வழிவகை செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு.டி.ஜெயச்சந்திரன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, சிவகங்கை மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் திருமதி.சீ.மைவிழிசெல்வி, சிவகங்கை மற்றும் தேவகோட்டை வருவாய் கோட்டாட்சியர்கள், வருவாய் வட்டாட்சியர்கள், காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள், மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.